# ॥ श्री हेमकामाक्षीदण्डकम् ॥

# தஞ்சை ஸ்ரீபங்காரு காமாக்ஷி அம்மன் தண்டகம்

இயற்றியவர் :

நா. வேங்கடரமணன்,

*Accountant, Nicholsan Co-op. Town Bank, Thanjavour*

Copyright] விரோதிக்ருது ஸு [இலவச வெளியீடு

*With best compliments*
*from :*

**GALADA ENTERPRISES**

**7, ELEPHANT GATE STREET,**

**MADRAS-1**

---

REGISTERED SUPPLIERS TO

SOUTHERN RAILWAY & P. W. D.

FOR

STREET LIGHTS, MERCURY

FITTINGS, AND UNDERGROUND

CABLES

# ॥ श्री हेमकामाक्षीदण्डकम् ॥

# தஞ்சை ஸ்ரீபங்காரு காமாக்ஷி அம்மன் தண்டகம்


இயற்றியவர் :

நா. வேங்கடரமணன்,

*Accountant, Nicholsan Co-op. Town Bank, Thanjavour*



Copyright]  விரோதிக்ருது ௵  [இலவச வெளியீடு

முதற்பதிப்பு 1971—1000

பாரதி விஜயம் பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை-5

॥ श्रीः ॥

श्री मुद्रा

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य श्रीमच्छंकरभगवत्पादप्रतिष्ठितश्रीकाञ्चीकामकोटिपीठाधिप जगद्गुरुश्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वतीश्रीपादादेशानुसारेण श्रीमज्जयेन्द्रसरस्वतीश्रीपादैः आण्डानल्लूर् ग्रामाभिजन श्रीवेङ्कटरमणशर्मणे क्रियतेनारायणस्मृतिः ॥

भवता विरचिता हेमकामाक्षीदण्डकाख्या स्तुतिः श्रीकाञ्चीपुरीतः आगत्य तञ्जापुर्यां सान्निध्यमावहन्त्याः हेमकामाक्षीदेव्याः महिमानं तञ्जापुर्यागमनवृत्तान्तवर्णनपूर्वकं विशदयति ॥

भक्ताः एतत्स्तुतिं द्राविड्यनुवादयुतां पठन्तः देवीप्रसादभाजः मङ्गलपरंपरा अवाप्नुयुरित्याशास्महे ॥

श्रीकाञ्चीक्षेत्रम्
सौम्यनिजाषाढ
बहुल द्वितीया

नारायणस्मृतिः

ஸ்ரீமுத்ரா

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக ஆசார்யர்களான ஸ்ரீமத் சங்கர பகவத் பாதர்களால் ப்ரதிஷ்டை செய்ய பெற்ற ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபர்களான ஜகத்குரு ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்ரீ பாதர்களின் ஆக்ஞைப்படி ஸ்ரீமத் ஜயேந்திர ஸரஸ்வதீ ஸ்ரீ பாதர்களால் ஆண்டாநல்லூர் ஸ்ரீ வேங்கடரமண சர்மாவின் பொருட்டு நாராயண ஸ்மரணம் செய்யப் படுகிறது.

தங்களால் இயற்றப்பட்ட "ஹேமகாமாக்ஷீ தண்டகம்" என்ற ஸ்தோத்ரம் ஸ்ரீ காஞ்சீபுரத்தி லிருந்து வந்து தஞ்சாவூரில் எழுந்தருளி யிருக்கும் ஹேம காமாக்ஷீ தேவியின் மகிமையை தஞ்சாவூர் வந்த வரலாற்றை விவரிப்பது மூலமாக தெளிவு படுத்துகிறது.

பக்தர்கள் தமிழ்மொழி அனுவாதத்தோடு கூடிய இந்த ஸ்தோத்திரத்தைப் படிப்பவர்களாக தேவியின் அனுக்ரஹத்தை யடைந்து ஸகல மங்களங்களையும் அடைவார்கள் என்று அனுக்ரஹிக்கின்றோம்.

ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்ரம்
ஸௌம்ய நிஜாஷாட
பஹுளத்விதியை

**நாராயண ஸ்ம்ருதிஃ**

॥ श्री गुरुभ्यो नमः ॥

# ॥ श्रीहेमकामाक्षीदण्डकम् ॥

## ஶ்ரீ ஹேம காமாக்ஷீ தண்டகம்

ओंकारात्मकभासिरूप्यवलये संशोभि हैमं महः
बिभ्रत्केलिशुकं त्रयीकलगिरं दक्षेण हस्तेन च ।
वामे लम्बकरं त्रिभङ्गिसुभगं दीनार्तनम्रत्पदं
स्वान्ते दीव्यतु मे कटाक्षशुभदं मन्दस्मितोदारकम् ॥

ஓங்காராத்மகபாஸிரூப்யவலயே ஸம்ஶோபி ஹைமம் மஹ:
பிப்ரத்கேலி ஶுகம் த்ரயீ கலகிரம் தக்ஷேண ஹஸ்தேந ச
வாமே லம்பகரம் த்ருபங்கி ஸுபகம் தீனார்த்தநம்ரத் பதம்
ஸ்வாந்தே தீவ்யது மே கடாக்ஷ ஶுபதம் மந்தஸ்மிதோ தாரகம்

ஓங்கார மணிய பிரகாசிக்கும் வெள்ளித் திருவாசியில் விளங்குவதும், வேதமொழியாகிய இன்பமான பேச்சைக் கொண்ட விளையாட்டிற்கான கிளியைத் தனது வலது கையில் தரித்திருப்பதும் தொங்குகின்ற இடது கையைக் கொண்டதும் உடலில் மூன்று வளைவுகள் இருப்பதால் அழகு பெற்றிருப்பதும் தீனர்கள், மனத்துன்பங் கொண்டவர்கள் ஆகியோரால் வணங்கப் பெறுகின்ற திருவடிகளைக் கொண்டதும், தன் கடாக்ஷங்களால் ஜீவராசிகளுக்கு நன்மையை அளிக்கின்றதும் புன்சிரிப்பினுல் பிரகாசிப்பதுமான தங்கமயமான ஒளிப்பிழம்பு என் மனதில் ஒளிரட்டும் (விளையாடட்டும்).

**दक्षिणे कामजिद्यस्याः चूडायां कामवल्लभः**
**वासः कामायुधस्याधः कामाक्षीं तां नमाम्यहम् ॥**

தக்ஷிணே காமஜித்யஸ்யாঃ சூடாயாம் காமவல்லபঃ |
வாஸঃ காமாயுதஸ்யாதঃ காமாக்ஷீம் தாம் நமாம்யஹம்||

தன்னுடல் வலப்புறத்தில் காமனை வென்ற சிவபெருமானைக் கொண்டவளும், திருமுடியில் விளங்குகின்ற பிறைச் சந்திரனைச் சூடியவளும், மன்மதனின் ஆயுதமான மாமரத்தினடியில் வாழ்பவளுமான ஸ்ரீ காமாக்ஷீ தேவியை வணங்குகிறேன்.

**कामान्धा तिलकं यस्याः काममाली च पुत्रकः ।**
**कामान्धोपमवाणीं तां कामाक्षीं प्रणमाम्यहम् ॥**

காமாந்தா திலகம் யஸ்யாঃ காமமாலீ ச புத்ரகঃ |
காமாந்தோபமவாணீம் தாம் காமாக்ஷீம் ப்ரணமாம்யஹம் ||

கஸ்தூரியை திலகமாக அணிந்திருப்பவளும், மாந்தளிர்களை மாலையாக அணியும் விநாயகரின் தாயாக விளங்குபவளும் குயிலுக்கொப்பான இனிய குரல் பெற்றவளுமான ஸ்ரீ காமாக்ஷீ தேவியை வணங்குகிறேன்.

**गाङ्गमाता तु या देवी गाङ्गमालाविराजिता ।**
**गां गता रक्षितुं मर्त्यान् गाङ्गदेहां नमामि ताम् ॥**

காங்கமாதா து யா தேவீ காங்கமாலா விராஜிதா
காம் கதா ரக்ஷிதும் மர்த்யான் காங்கதேஹாம் நமாமி தாம்

கங்கையில் தோன்றிய முருகனுக்குத் தாயானவளும் ஆகாய கங்கையில் முளைத்த தாமரை மலர்களான மாலைகளைப் பூண்டு நிற்பவளும் அழியும் இயல்புடைய மனிதர்களைக் காப்பாற்றும் பொருட்டு இப்புவியை வந்தடைந்தவளும், பொன் உடல் கொண்டு ஒளிர்பவளுமான ஸ்ரீ காமாக்ஷீ தேவியை வணங்குகிறேன்.

**जयैकाम्रेश्वरार्धाङ्गि जय तञ्जाविलासिनि ।**
**जय बङ्गारुकामाक्षि जय सर्वार्थदायिनि ॥**

ஜயைகாம்ரேஶ்வரார்தாங்கி ஜய தஞ்சாவிலாஸிநி
ஜய பங்காருகாமாக்ஷி ஜய ஸர்வார்த்ததாயிநி ||

ஏகாம்ரேஶ்வரரின் இடப்பக்கம் பங்கு கொண்டவளே! தஞ்சைமாநகரில் விளங்குபவளே! உன்னை அண்டிய அடியார்களுக்கு எல்லா பேறுகளையும் அளிப்பவளே! பங்காரு காமாக்ஷியே! நீ எல்லாவற்றிற்கும் மேம்பட்ட பொருளாக இலங்குவாயாக.

**जय जननि सुरासुरस्तोमसंसेव्यमानातिपुण्य प्रदेशप्रमुख्यामधिष्ठाय काञ्चीं स्वमूलस्वरूपेण भक्तेष्टसन्दानचिन्तामणे मञ्जुसंभाषणे भामणे ॥**

ஜய ஜநநி ஸுராஸுரஸ்தோமஸம் ஸேவ்யமானாதி புண்யப்ரதேசப்ரமுக்யாமதிஷ்டாய காஞ்சீம் ஸ்வமூல ஸ்வரூபேண பக்தேஷ்டஸந்தான சிந்தாமணே! மஞ்சு ஸம்பாஷணே பாமணே!

தாயே! தேவர்களாலும் அசுரர்களாலும் ஸேவிக்கப்படுகின்ற மிகச் சிறந்த புனிதப் பிரதேசங்களுக்குள் முக்யமான காஞ்சி மாநகரை அடைந்து எழுந்தருளித் தன் மூல ஸ்வரூபத்துடன் பக்தர்களுக்கு அபீஷ்டங்களை அருளும் சிந்தாமணியே! அழகாகப் பேசுபவளே! சிறந்த ஒளிப்பிழம்பே! நீ என்றும் வெற்றியுடன் ஒளிர்வாயாக.

**मूलदेवीतृतीयाक्षिसञ्जाततेजोनुरूपां सुवर्णां सुमूर्तिं विधायाम्ब! वाणीपतिस्त्वां ध्रुवे चैकदेशे प्रतिष्ठाप्य काञ्च्यां विवाहोत्सवं चारु निर्वृत्य चैकाम्रनाथेन कामाक्षि! संयोजयामास चाकाशभूपालमेवात्र कर्तुं महं ते सदा ॥ कामकोटी-सुपीठावमर्देन नष्टेक्षणः पद्मभूश्चक्रपूजां तथाराधनं ते स्वनुष्ठाय चक्षुः प्रकाशं प्रपेदे भृशम् ॥**

மூலதேவீ த்ருதீயாக்ஷி ஸஞ்சாத தேஜோனுரூபாம் ஸுவர்ணும் ஸுமூர்த்திம் விதாயாம்ப! வாணீபதிஸ்த்வாம் த்ருவே சைகதேஶே ப்ரதிஷ்டாப்ய காஞ்ச்யாம் விவாஹோத்ஸவம் சாரு நிர்விருத்ய சைகாம்ர நாதேந காமாக்ஷி! ஸம்யோஜயாமாஸ சாகாஶ பூபாலமேவாத்ர கர்த்தும் மஹம் தே ஸதா காமகோடீ ஸுபீடாவமர்தேந நஷ்டேக்ஷணஃ பத்மபூஃ சக்ரபூஜாம் ததாராதனம் தே ஸ்வனுஷ்டாய சக்ஷுஃ பிரகாசம் ப்ரபேதே ப்ருஶம்.

தாயே! மூலதேவியாக நீ விளங்குங்கால் உன் மூன்றாவது கண்ணிலிருந்து தோன்றிய ஒளி வடிவம்

அனைய அழகான ஸ்வர்ண விக்ரஹத்தைப் பிரும்மா உண்டாக்கி உன்னைத் துருவஸ்தானத்தில் காஞ்சியில் பிரதிஷ்டை செய்து ஸ்ரீ ஏகாம்பர நாதருடன் திருக்கல்யாண உற்சவங்களைத் தானே நடத்தி வந்து பின்னர் ஆகாசபூபாலன் என்ற ஓர் அரசனையே உன் விவாஹ மஹோத்ஸவத்தினை நடத்துமாறு பணித்து அதற்கான ஏற்பாடு செய்தார். ஒரு சமயம் காமகோடி பீடத்தை (பீஜாக்ஷரங்கள் கொண்டது என அறியாமல்) மிதித்ததால் பிரும்மா தன் கண் பார்வையை இழந்து, பின்னர் விவரமறிந்து காஞ்சியில் ஸ்ரீ சக்ரபூஜையைச் செய்து உன்னையும் வழிபட்டு மீண்டும் தன் கண் பார்வையை அடைந்தார்.

**यवनजनितघोरकर्नाटकानीककाले नु दुर्वासश्शिष्य मुख्यैर्वरस्थानिकैराशु शेञ्चीं प्रपद्याम्ब ! सन्तानभूपालसंपूजिताऽभूः ॥ ततश्चोडयार्पालयस्वामिना त्वं समाराधिताऽसीश्चिरायाऽथ गत्वा बहून् ग्रामदेशान्मुदा हाटकक्षेत्रसंशोभमाना सुदीर्घास्समास्तत्र नीत्वाऽथ, तञ्जापुराधीशभाग्यप्रकर्षेण संप्राप्य तञ्जां च पूतां, सुहृन्तूलजेन्द्राख्य राज्ञाम्ब ! संस्थापिताऽस्मिन् शुभे मन्दिरे रामकृष्णालयाभ्यन्तराभासि तेन प्रदत्तां भुवं चापि लब्ध्वाऽत्र दुर्वाससादिष्टसौभाग्यचिन्तामणिप्रोक्तपूजां नु कुर्वन्ति ते साधवः ॥**

யவநஜனிதகோரகர்ணாடகாநீககாலே நு துர்வாஸஸ்ஸிஷ்ய முக்யைர்வரஸ்தானிகைராமூ சேஞ்சீம் ப்ரபத்யாம்ப ! ஸந்தான பூபால ஸம்பூஜிதா (அ) பூ: ||

ததஸ்சோடயார்பாளேயஸ்வாமிநா த்வம் ஸமாராதி தாஸீঃ, சிராயாத கத்வா பஹூன் க்ராமதேசாங்முதா ஹாடகக்ஷேத்ர ஸம்சோபமானு, ஸுதீர்காஸ்ஸமாஸ் தத்ர நீத்வா(அ)த, தஞ்சாபுராதீச பாக்யப்ரகர்ஷேண ஸம்ப்ராப்ய தஞ்சாம் ச பூதாம், ஸுஹ்ருத்துள ஜேந்திராக்ய ராக்ஞாம்ப! ஸம்ஸ்தாபிதா(அ)ஸ்மின் சுபே மந்திரே, ராமகிருஷ்ணாலயாப்யந்தரா பாஸி தேந ப்ரதத்தாம் புவம் சாபி லப்த்வாத்ர துர்வாஸ ஸாதிஷ்ட ஸௌபாக்ய சிந்தாமணி ப்ரோக்தபூஜாம் நு குர்வந்தி தே ஸாதவঃ ||

முகமதியர்களால் ஏற்பட்ட கொடிய கர்நாடக யுத்த சமயத்தில் ஸ்ரீ துர்வாஸ முனிவரின் சிஷ்யர் களும் உன்னைப் பூஜிக்கும் ஸ்தானீகர்களுமான பக்தர் களால் எடுத்து வரப்பட்டு செஞ்சி நகரையடைந்து அங்கு அரசாண்டு வந்த ஸந்தான பூபாலனால் ஆராதிக்கப்பட்டவளாக இருந்தாய். பின்னர் உடையார்பாளேயம் சென்று அவ்வூர் ஜமீந்தாரால் நீ நன்கு வழிப்பட்டவளாக வெகு நாட்கள் இருந்தாய். அடுத்துப் பல ஊர்களே அடைந்து திருவாரூரில் நீண்ட நாள் களிப்புடன் பிரகாசித்து வந்து, கடைசி யாகத் தஞ்சை மன்னன் செய்த பெரும் பாக்யத் தினல் புனிதமான தஞ்சை மாநகரை அடைந்து, அப்போதைய அரசனின தூயமனம் கொண்ட துளஜேந்திர ராஜா அவர்களால் இப்போதைய இந்தத் திருக்கோயிலில் ஸ்தாபிக்கப் பட்டவளாக ஸ்ரீ ராமன் ஸ்ரீ கிருஷ்ணன் இவர்களுடைய திருக்கோயில்களுக்கு இடையில் பிரகாசித்துக் கொண்டு அவ்வரசனல்

அளிக்கப்பட்ட ஏராளமான நிலங்களையும் அடைந்த வளாக விளங்குகிறாய். இங்கு நல்லோர்களான ஸ்தானிகர்கள் ஸ்ரீ துர்வாஸ முனிவர் அருளிய "ஸௌபாக்ய சிந்தாமணி" என்ற நூலில் கூறிய வண்ணம் உன்னைப் பூஜித்து ஆராதிக்கின்றனர்.

**शरभमहिपवर्धितानेक भागं च ते मन्दिरं काञ्चिपीठाधिनाथप्रकाण्डैरथो धर्मकर्तृप्रमुख्यैश्च देवालयानल्पवित्तव्ययेनातिनूत्नीकृतं तत् ॥ शशाङ्कावतंसे, सुगत्या जितोन्मत्तहंसे, रुचातीतहंसे, नतांसे ॥**

சரபமஹிப வர்திதாநேக பாகம் ச தே மந்திரம் காஞ்சி பீடாதிநாத ப்ரகாண்டைரதோ தர்மகர்த்ரு ப்ரமுக்யைஶ்ச தேவாலயானல்ப வித்தவ்யயேனாதி நூத்நீக்ருதம் தத் || ஶஶாங்காவதம்ஸே, ஸுகத்யா ஜிதோன் மத்தஹம்ஸே, ருசாதீத ஹம்ஸே, நதாம்ஸே.

சந்திரனைத் திருமுடியில் தரிப்பவளே! அழகிய தன் நடையினால் மதம் கொண்ட அன்னப் பறவையைப் பழிப்பவளே! ஒளியினால் கதிரவனை மிஞ்சுபவளே! வணங்கிய தோள்களைக் கொண்டவளே! உனது திருக்கோயிலை முன்பு சரபோஜி மன்னர் பல கட்டிடங்கள், கோபுரங்கள் முதலியனவற்றைக் கட்டி அழகு பெறச் செய்தார். பின்னர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளால் இது புதுப்பிக்கப்பட்டது. அண்மையில் தேவஸ்தான தர்மகர்த்தாக்களால் திருக்கோயிலின் சொந்தப் பணத்தைக் கொண்டு உனது திருக்கோயில் புதுப்பிக்கப்பட்டு விளங்குகிறது.

तुलामीनमासात्तसत्फल्गुनीऋक्षशोभादिनेष्वत्र जन्मोद्वहाद्युत्सवं, शारदे रात्रिकाले प्रमुख्योत्सवं चातिसंभारपूर्वेण दिव्याभिषेकेण संभावयन्त्यम्ब ! ते भक्तबृन्दाः ॥ सदानन्दकन्दे, सुमाकन्दनन्देऽच्छकुन्दाभदन्ते शुभे गन्धमार्जाररेतोऽभिसंवासिते, जानकीजानि संवन्दिते, जामदग्न्येन सन्नन्दिते ॥

துலாமீனமாஸாத்தஸத்பல்குனீ ருக்ஷ சோபாதிநேஷ்வத்ர ஜந்மோத்வஹாத்யுத்ஸவம், சாரதே ராத்ரி காலே ப்ரமுக்யோத்ஸவம் சாதிஸம்பாரபூர்வேண திவ்யாபிஷேகேண ஸம்பாவயந்த்யம்ப தே பக்த ப்ருந்தாঃ ஸதானந்தகந்தே! ஸுமாகந்தநந்தே! அச்சகுந்தாபதந்தே! சுபே! கந்தமார்ஜாரரேதோபி ஸம் வாஸிதே, ஜானகீஜானி ஸம்வந்திதே! ஜாமதக்ந்யேந ஸன்னந்திதே!

ஆனந்தக் கிழங்கே! மாமரத்தினடியில் மகிழ்ச்சி யடைபவளே! தூய குந்த புஷ்பங்களைப் போன்ற பற்களைக் கொண்டவளே! மங்களமானவளே! புனுகுப் பூச்சினல் நல்ல மணம் பெற்றவளே! ஸீதா பதியான ஸ்ரீ ராமனல் வணங்கப்பட்டவளே! பரசுராம னல் மகிழ்விக்கப்பட்டவளே! ஐப்பசி பங்குனி மாதங் களில் வரும் பூரம், உத்திரம் ஆகிய திருநக்ஷத்திரங் களில் முறையே உனது ஜன்மோத்ஸவம், திருக் கல்யாண உற்சவம் இவைகளையும், சாரதா நவராத்ரீ காலத்தில் மிகச் சிறந்த திருவிழாவினையும் அபிஷேகம் முதலிய சிறந்த ஆராதனங்களால் உன் பக்தர்கள் இனிது நடாத்தி வருகிருர்கள்.

**मधुरसुकविमूकसंश्लाघिते, पूज्यदुर्वाससाऽऽराधिते, धौम्यसद्भक्तसंभाविते, शङ्कराचार्यसंसेविते, काञ्चिपीठेश्वरैः पूजिते, श्यामशास्त्रीतिविख्यातसङ्गीतराट्कीर्तिते, तञ्जपूर्वासिसौभाग्यदात्रीं नतानेकशोकापहर्त्रीं, भवोत्फुल्लवल्लीलवित्रीं फलानां सवित्रीं, पवित्रीं सदा भावये त्वां वराकः ॥**

மதுரஸுகவிமூக ஸம்ச்லாகிதே பூஜ்யதுர்வாஸஸா(ஆ)ராதிதே, தௌம்யஸத்பக்த ஸம்பாவிதே! சங்கராசார்ய ஸம்ஸேவிதே, காஞ்சிபீடேச்வரைః பூஜிதே, ச்யாமசாஸ்த்ரீதி விக்யாதஸங்கீதராட் கீர்த்திதே! தஞ்சபூர்வாஸி ஸௌபாக்யதாத்ரீம், நதாநேகசோகாபஹார்த்ரீம், பவோத்புல்லவல்லீலவித்ரீம், பலானும் ஸவித்ரீம், பவித்ரீம். ஸதா பாவயே த்வாம் வராகః ||

இனிமையான கவிதை பாடவல்ல ஸ்ரீ மூகரால் புகழப்பட்டவளே, பூஜிக்கத் தகுந்த துர்வாஸ முனிவரால் ஆராதிக்கப்பட்டவளே! தௌம்யர் என்ற சிறந்த முனிவரால் கௌரவிக்கப்பட்டவளே! ஸ்ரீசங்கர பகவத் பாதர்களால் ஸேவிக்கப்பட்டவளே! ஸ்ரீ காஞ்சி பீடாதிபதிகளால் பூஜிக்கப்பட்டவளே! சியாம சாஸ்திரிகள் என்று புகழ்வாய்ந்த ஸங்கீத பூபதியினுல் கீர்த்தனங்களால் பாடப்பட்டவளே! தஞ்சை நகர் வாழும் மக்களுக்குப் பரம ஸௌபாக்யத்தைக் கொடுப்பவளும் உன்னை வணங்கியவர்களின் பல்வேறு துன்பங்களைத் துடைப்பவளும், ஸம்ஸாரமாகிய செழித்து வளர்ந்த கொடியினை யறுக்கும் கருக்கரி

வாளாக இருப்பவளும் அவரவர்கள் புண்யத்திற்கேற்பப் பலனை யளிப்பவளும் மிகவும் தூய்மையானவளும் ஆன உன்னை அறிவிலியான நான் எப்பொழுதும் மனதில் தியானிக்கிறேன்.

**कृपासान्द्रदृष्टिं कुरुष्वाम्ब ! शीघ्रं, मनः शुद्धिमच्छां च देह्यात्मविद्यां क्षमस्वापराधं मया यत्कृतं ते, प्रयच्छात्रसौख्यं परत्राऽपि नित्यं, विधेह्यङ्घ्रिपद्मे दृढां भक्तिमारात् नमस्ते शिवे देहि मे मङ्गलं, पाहि कामाक्षि मां, पाहि कामाक्षि माम् ॥**

க்ருபாஸாந்த்ரத்ருஷ்டிம் குருஷ்வாம்ப சீக்ரம், மநஃ சுத்திமச்சாம் ச 'தேஹ்யாத்மவித்யாம், க்ஷமஸ்-வாபராதம் மயா யத்க்ருதம் தே, ப்ரயச்சாத்ர ஸௌக்யம் பரத்ராபி நித்யம், விதேஹ்யங்க்ரிபத்மே த்ருடாம் பக்திமாராத், நமஸ்தே சிவே! தேஹி மே மங்களம், பாஹி காமாக்ஷி மாம், பாஹி காமாக்ஷி மாம்.

தாயே! கருணை ததும்பும் கடைக்கண் பார்வையை விரைவில் என் மீது செலுத்துவாயாக! நல்ல மனத் தூய்மையையும் ஆத்ம வித்யையும் கொடுப்பாயாக. உனக்கு நான் இழைத்த எல்லாக் குற்றங்களையும் பொறுத்தருள வேண்டும். இம்மை ஸௌக்யத்தையும், மறுமைப் பேரானந்தத்தையும் அளிப்பாயாக. உனது திருவடிகளில் உறுதியான பக்தி கொள்ளுமாறு என்னைச் செய்வாயாக. மங்களமானவளே! சிவபெருமானின் அன்புமிகு நாயகியே! காமாக்ஷி தேவியே! என்னைக் காத்தருள்வாயாக. என்னைக் காத்தருள்வாயாக.

## குறிப்புகள்

1. இந்நூல் "**ஸ்ரீ காமாக்ஷீ விலாஸம்**" என்ற மிகப் பழைய கிரந்தத்தையும், திருக்கோயிலைச் சேர்ந்த ஸ்தானீகர்களிடம் கேட்டறிந்த விவரங்களையும் ஆதாரமாகக் கொண்டது.

2. சுவேதவராக கல்பம் பௌச்ய மங்வந்தரத்தில் ஸ்ரீ முக வருஷம் ஐப்பசி மாதம் கிருஷ்ணபக்ஷ தசமி பூர நக்ஷத்திரத்தில் இந்த பங்காரு காமாக்ஷி தோன்றினாள்.

3. இந்த தேவியை கிருதயுகத்தில் ஸ்ரீ துர்வாஸ முனிவரும், திரேதாயுகத்தில் ஸ்ரீ பரசுராமரும், துவாபரயுகத்தில் ஸ்ரீ தௌம்யாசாரியரும் கலியுகத்தில் ஸ்ரீ மூகாசார்யரும் வழிபட்டனர் என்பது புராண வரலாறு.

4. இத்தேவியின் திருமேனி முழுவதும் புனுகுப் பூச்சு கொண்டுள்ளதாக திகழ்கிறது.

5. நவராத்ரியில் 9 நாள், ஐப்பசி பூரம், பங்குனி உத்திரம் ஆகிய 11 நாட்களில் மட்டுமே அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெறுகிறது.

6. காஞ்சியில் உற்சவ மூர்த்தியாக இருந்த விக்ரஹமே தற்போது தஞ்சையில் இக்கோயிலில் காமகோடியாக தனி சன்னதியில் பிரகாசித்து வருகிறது.

7. யத்பாபம் லபதே காஞ்சீ பிலோர்த்வே பாத யோஜநாத் | தத் பாபாந் முச்யதே ஹேம காமாக்ஷீ ஸேவயா நரः || என்று காமாக்ஷீ விலாஸ கிரந்தத்தில் கூறியவாறு காஞ்சியில் பிலத்திற்கு மேல் பாத ஸ்பர்சம் ஏற்பட்டால் அப்பாவம் நீங்க இந்த ஹேம காமாக்ஷியை ஆராதிக்க வேண்டும் என்பதாகிறது.

8. ஸ்ரீ அம்பாள் கி. பி. 1780ல் தஞ்சை வந்து சேர்ந்தாள். கி. பி. 1786ல் முதன் முதலாக ஸ்ரீ துளஜா மஹாராஜா அவர்களால் ே நிர்மாணிக்கப் பட்டது. சமீபத்தில் 6-6- ஸ்ரீ காஞ்சீ பெரியவாளாலும், 7-4-1963ல், கர்த்தாக்களாலும் புதுப்பிக்கப்பட்டது.

---

**புஸ்தகம் கிடைக்குமிடம் :—**

(1) N. வேங்கடரமணன்,
1936 கோடீசுவரன் சந்து
மேலவீதி, தஞ்சாவூர்.

(2) N. சங்கரன்,
சேதுராம் தியாகராஜன் அண்டு கோ
தன் பில்டிங்ஸ்,
175/1 மௌண்ட் ரோடு, சென்னை.

*With the Best Compliments*

*from*

# W.S. Insulators of India Ltd.

**175/1, Dhun Building,**

**MADRS-2.**

With Best Compliments

from :

**Maike Industrial Corporation**

**121, N. S. C. BOSE ROAD,**

**MADRAS-1.**

**Manufacturers & Suppliers of :**

**Cable Boxes, Distribution Boards, Switch Boards and Glands etc. to Government, Electricity Board and Railways.**

Bharati Vijayam Press, Triplicane, Madras-5.